அனுப்புநர்

பா.பொன்னையா, இ.ஆ.ப.,
இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி,
பனகல் கட்டிடம், சைதாப்பேட்டை,
சென்னை–15.

பெறுநர்

மாவட்ட ஆட்சித் தலைவர்
(வளர்ச்சிப் பிரிவு),
அனைத்து மாவட்டங்கள்.

ந.க.எண்.71176/2023/இ4, நாள்.21.12.2024

அய்யா,

பொருள். பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கிராம ஊராட்சி செயலாளர்களுக்கு வட்டார அளவில் பணியிட மாறுதல் வழங்குதல் – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை.
1. அரசு கடித ந.க.எண்.23847/S/98–1, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்.05.08.1998.
2. அரசாணை (நிலை) எண்.113, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை(இ5), நாள்.13.09.2023.
3. தமிழ்நாடு ஊராட்சி செயலாளர்கள் சங்க மனு நாள்.25.09.2024.

பார்வையில் காணும் கடிதங்களின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

ஊராட்சி செயலாளர்களுக்கான பணிவிதிகள் நிர்ணயித்து வெளியிடப்பட்ட பார்வை 2–ல் குறிப்பிட்டுள்ள அரசாணையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் பணிபுரியும் ஊராட்சி செயலாளர்களை நிர்வாக காரணங்களுக்காக வட்டார அளவில் மாறுதல் செய்யும் அதிகாரத்தினை சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலருக்கும் (கி.ஊ.), ஊராட்சி ஒன்றியங்களுக்கிடையேயான பணியிட மாறுதல் செய்யும் அதிகாரத்தினை மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளருக்கும் (வளர்ச்சி), மாவட்ட மாறுதல் செய்யும் அதிகாரத்தினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களுக்கும் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 3–ல் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு ஊராட்சி செயலாளர்கள் சங்க கோரிக்கை மனுவினை பரிசீலனை செய்ததில், பின்வரும் காரணங்களுக்காக கிராம ஊராட்சி செயலாளர்களுக்கு, வட்டார அளவில் கலந்தாய்வு மூலம் பணியிட மாறுதல் வழங்கப்பட வேண்டியுள்ளது.

Scanned with OKEN Scanner

1. ஊராட்சி செயலாளர்கள் ஒரே கிராம ஊராட்சியில் தொடர்ந்து பல ஆண்டுகளாக பணிபுரிந்து வருவதை மாற்றியமைத்தல்
2. ஊராட்சி செயலாளர் முதுநிலை மற்றும் நிர்வாக அனுபவத்திற்கு ஏற்ப கிராம ஊராட்சிகளில் பணியமர்த்துதல்
3. வயது மற்றும் உடல்நலம் சார்ந்த அடிப்படையில் கிராம ஊராட்சிகளை ஒதுக்கீடு செய்தல்
4. களஅளவில் மாறுபட்டுள்ள வெவ்வேறு ஊராட்சிகளில் பணியாற்றும் வாய்ப்பு பெறுவதால் ஊராட்சி செயலாளர்களின் திறன் மேம்பாடு அடைதல்
5. கிராம ஊராட்சியில் உள்ள பணிகளுக்கு ஏற்ப தகுதியான ஊராட்சி செயலாளர்களை பணியமர்த்துதல்
6. நிர்வாக நலன் மற்றும் கலந்தாய்வு அடிப்படையில் ஊராட்சி செயலாளர்களுக்கு பணியிட மாறுதல் வழங்குதல்

எனவே, கிராம ஊராட்சிகளில் உள்ள பணிகளை ஊராட்சி செயலாளர்கள் மூலமாக சிறந்த முறையில் செயல்படுத்திடும்பொருட்டு, அரசு கடித ந.க.எண்.23847/S/98–1, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்.05.08.1998, மற்றும் அரசாணை (நிலை) எண்.113, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை(இ5),நாள்.13.09.2023–ன்படி ஊராட்சி செயலாளர்களுக்கு தேவை மற்றும் நிர்வாக நலன் அடிப்படையில் கலந்தாய்வு நடத்தி வட்டாரத்திற்குள் பணியிடமாறுதல்களை வழங்கிட தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒம்./–பா.பொன்னையா
இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி

SS 21/12/24
இணை இயக்குநர்

21/12/24

Scanned with OKEN Scanner